# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC –92/2021

**வழக்கு சாட்சி :PW5(LW5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | போதும்பொண்ணு | தொழில் | : | கூலிவேலை |
| கணவர் பெயர் | : | ராமன் | சமயம் | : | |
| கிராமம் | : | சூரியம்பட்டி | வயது | : | 45 |
| தாலுக்கா | | | | : | |

Solemnly affirmed by Thiru. Abraham Selvin , JA of this Court in accordance with the provisions of Act X of 1873

**எதிரி ஆஜர் .**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on** the **day 27th day of March 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 – Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar Card of the Witness verified.**

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :–</u>**

1. நான் தற்போது சூரியம்பட்டியில் குடியிருந்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.இறந்து போன புவனேஷ்வரி எங்களுடன் தான் வேலை செய்து வந்தார். சம்பவம் நடந்த தேதி, மாதம் , வருடம் ஞாபகம் இல்லை. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு கன்னியாப்பட்டியில் உள்ள ஆஜர் எதிரியின் பனியன் கம்பெனியில் பணியாற்றி வந்தேன். அன்றைய தினம் இந்திராணி, கலைவாணி, முத்துலெட்சுமி, சந்தியா, முத்துலெட்சுமி, செண்பவள்ளி ஆகியோருடன் சேர்த்து 15 நபர்கள் வழக்கம் போல் பனியன் கம்பெனிக்கு வேலைக்கு சென்றுவிட்டு ஆஜர் எதிரியின் டாடா ஏசி வண்டியில் வீட்டிற்கு திரும்பி கொண்டிருந்தோம். இரவு 09.00 மணியளவில் மாம்பட்டி மற்றும் சொக்கம்பட்டிக்கு இடையில் வண்டியில் வந்து கொண்டிருந்த போது டம் என்று சத்தம் கேட்டது. திரும்பி பார்த்த போது எங்களுடன் வந்த புவனேஷ்வரி வண்டியில் விழுந்துவிட்டார். அவரை பார்த்த பொழுது மூச்சு, பேச்சு இல்லை. உடனே நாங்கள் அனைவரும் புளியம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவரை அங்கிருந்து புதுக்கோட்டைக்கு அழைத்து செல்லுமாறு அறிவுறுத்தினார். அதனால் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் இரண்டு நாட்கள் கழித்து விசாரித்த போது அவர் இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>( சாட்சியானவர் அரசு வழக்கை பகுதியளவு ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya Sakshya Adhiniyam 2023</u>**

**சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால் நீதியின் பொருட்டு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. ஆஜர் எதிரியின் கம்பெனியில் தான் தற்போது வரை வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரி தான் எங்களை வேலைக்கு அவரது வாகனத்தில் எப்போதும் அழைத்து செல்வார் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆஜர் எதிரி தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டினார் என்றால் சரிதான். சம்பவத்தன்று ஆஜர் எதிரி வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டினார் என்று போலிசார் விசாரரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரி தனது முதலாளி என்பதாலும், அவருடைய கம்பெனியில் பணிபுரிவதாலும், அவரை காப்பாற்றுவதற்காக அவர் வாகனத்தை வேகமாக ஓட்ட வில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

1. இறந்து போன புவனேஷ்வரி பயணித்த அதே டாடா ஏசி வாகனத்தில் நானும் பயணித்தேன் என்றால் சரிதான். புவனேஷ்வரி தலையில் கட்டை விழுந்ததால் தான் அவருக்கு அடிப்பட்டது என்றால் டம் என்ற சத்தம் வந்தது, அதன் பின்பு தான் எனக்கு தெரியும், கட்டை விழுந்தது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு பக்கத்தில் உள்ளது புளியமரம் என்றால் சரிதான். கட்டை விழுந்ததால் தான் அவருக்கு அடிப்பட்டது என பின்னிட்டு நான் கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். கட்டையை காண்பித்து என்னிடம் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். டாடா ஏசி வாகனம் மேல்புறம் திறந்த வெளியாக இருக்கும் என்றால் சரிதான்.

2. எப்போதும் போல் சாதாரண வேகத்தில் தான் வண்டி சென்றது என்றால் சரிதான். நாங்கள் சத்தம் போட்ட பின்பு தான் மேற்படி சம்பவம் நடந்ததே வாகன ஓட்டுநருக்கு தெரிய வந்தது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு ஓட்டுனரின் அதிவேகமோ, அஜாக்கிரதையோ காரணமில்லை என்றாலும் , ஏற்கனவே சவுக்கு கட்டைகள் ஏற்றிக் கொண்டு லாரி சென்றது என்றும், அந்த லாரியில் இருந்த சவுக்கு கட்டை புளியமர கிளையில் சிக்கி கொண்டது என்றும், எதிரயின் வாகனம் அந்த புளியமரத்தை கடக்கும் போது தற்செயலாக அந்த கட்டை விழுந்து இறந்து போன புவனேஷ்வரி மீது விழுந்து காயத்தை ஏற்படத்தியது என்றால் சரிதான். விபத்திற்கு எந்த விதத்திலும் எதிரி பொறுப்பானவர் இல்லை என்றால் சரியல்ல. விபத்து காப்பீடு பெற வேண்டும் என்பதற்காக இறந்து போனவர் தாயார் கொடுத்த புகாருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல.